Layout Application - Final Approval Letter

Roc No: 03/2023-2024 Date: 3/11/24 4:57 PM

From:

Village Panchayat

Panchayat Office, Mochakodmpalayam, Andankoil West (Post), Karur-639008.

To :

Mr. P. Selvaraj and Mr. K. Balasubramaniyan,
No.120/21, Kabilan Garden,Kothai Nagar,
Karur Town, Karur Taluk,
Karur - 639201.

Online Application Number: TX3T3HIF

Sir/ Madam,

Sub :

Residential Layout – Office of Andankovil West Panchayat/Village, Karur District, Manmangalam Taluk, No.200/A5, Andankovil West Panchayat/Village, Thanthoni Panchayat Union- Manmangalam Taluk, Karur District. Extent of Acre 3.42 - Technical clearance/Concurrence/Planning permission issued Final order for further action - Reg.

Ref :

1.Application ReferenceNo:TX3T3HIF/2024/TCP received through Single Window Portal from Mr. P. Selvaraj and Mr. K. Balasubramaniyan, Dated: 21.02.2024.
2. Road pattern plan approved by the District Town and country planning Office, Karur, dated: 05.02.2024.
3. Letter Roc. No.19799/2020, Dated: 24.12.2020 of Director of Town and Country Planning, Chennai (Circular).
4. Gift deed document no.768/2024 dated.06.02.2024 Uploaded by the Applicant Mr. P. Selvaraj and Mr. K. Balasubramaniyan, Dated: 05.02.2024.
5.G.O. No.138, Housing and Urban Development Department, Dated: 04.06.2004
6.G.O. No.79, Housing and Urban Development Department, Dated: 04.05.2017.
7.G.O.No.18,Department of Municipal Administration and Water supply, Dated:04.02.2019, G.O.16 Department of Municipal Administration and Water Supply, dated: 31.01.2020 and G.O. No.181, Housing and Urban Department, Dated:09.12.202
8.G.O. No.141, Housing and Urban Development Department, Dated: 23.09.2020
9. G.O. No.141, Housing and Urban Development Department, Dated: 16.07.2022
10.Government Letter No.19113 / 4 (3) / 2017-1, Housing and Urban Development Department, Dated: 30.08.2017.

11. Letter no.13686/2017/LA1, Dated: 08.09.2017 of Commissioner of Town and Country Planning, Chennai (Circular).
12.Letter Roc No.320/ 2022/TCP3, Dated:07.01.2022 of Director of Town and Country Planning, Chennai. (Circular).
13. Demand raised for payment of OSR charges and Centage charges and Development Charges respectively dated 05.02.2024 and 19.02.2024
14. Paymentof OSR charges and Centage charges and Development Chargesreceived from the applicant respectively on 14.02.2024 and 19.02.2024.(Payment of OSR and Centage Fee)
15. Andankovil West Panchayat Resolution No. 782/2023-2024

Body:

Body: The application seeking technical clearance/ concurrence/Planning Permission for the proposed formation of Residential layout Application (ReferenceNo.TX3T3HIF)to an extent of Acre 3.42 in the land bearing S.F.No.200/A5, Andankovil West Village/Panchayat, Thanthoni Panchayat Union Final order issued.

SPECIAL CONDITIONS:

1. This office has not legally certifiedthe title to the ownership by granting the technical clearance and planning permission. Only the entitlement to Develop the land by the applicant is verified through the document suploaded in the web portal.Any person wishing to purchase the property must Individually as certain the ownership of the property of the developer/seller.If any dispute arises towards theownership,the same shall be settled through the appropriate forum. This office is not the appropriate authority to decide on this.

2. The owners/developers shallbe allowed either to carryout Infrastructure development works as per the standards specified by the local body Concerned or to pay the estimate cost to the local body.Concerned local body shall prescribe the standards for the provisions of basic Infrastructure like roads,drains, water supply etc.forthe layout, asper existing rules. Before taking over the Infrastructure developed by the owners/developers, the local bodies shall ensure the quality of the worked one by the owners/developers.

Signature valid Village

Signed by: Village Panchayat President
Location:Karur
Date:2024.03.11 16:57:57

ஊராட்சி மனைப்பிரிவு அனுமதி உத்தரவு

ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை.திரு. V.C. செல்லை சிவா

ந.க.03/2023–24 நாள்: 31.03.2024

பொருள்: **மனைப்பிரிவு அனுமதி** – கரூர் ஊராட்சி ஒன்றியம் – ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி ஆத்தூர் கிராம சர்வே எண். 1134/**1 B4 0.06.90** ஹெக்டேர் (0.17 செண்ட்) பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது – ஒப்புதல் அளித்த மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் அளித்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்– 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி. (1) துறை நாள்:31.01.2020
2. அரசாணை எண்– 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி. (1) துறை நாள்:04.02.2019
3. அரசாணை எண்– 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:04.05.2017
4. அரசாணை எண்– 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:04.06.2004
5. அரசாணை எண்– 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:23.09.2020
6. அரசாணை எண்– 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்:09.12.2020.
7. அரசாணை எண்– 19113/ந.வ.4(3) /2017/1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:30.08.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019 –பிஏ2, நாள்:05.02.2020
9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:19799/2020 போ, நாள்:24.12.2020 மற்றும் நாள்:08.02.2021
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA1, நாள்:08.09.2017
11. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:320/2022/TCP3, நாள்:07.01.2022
12. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019/TCP2, நாள்:14.08.2021
13. வேளாண்மை இணை இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.இ1 /166/2024, நாள்:11.01.2024
14. நகர் ஊரமைப்புத்துறை உறுப்பினர் செயலர்/ உதவி இயக்குநர்அவர்களின் கடிதம் ந.க.எண்:4367/2019/TCP2, நாள்:14.10.2019
15. ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி மன்ற தீர்மான எண்: 1283/2023 – 24, நாள்:04.03.2024
16. கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர்அவர்களின் கடிதம் – ROC No.TX3T3HIF/2024/TCP நாள்:21.02.2024

உத்தரவு

பார்வை 9 ல் கண்டுள்ள கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர்அவர்களின்செயல்முறைகளில் கருர் ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி, ஆத்தூர் கிராம சர்வே எண்1134/1 **B4 0.06.90** ஹெக்டேர் (0.17 செண்ட்) அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு (இணையதள ஒப்புதல் எண் SWP/TX3T3HIF/2024) "ம.வ /கா பு ந வகு (கமா) எண். 29/2024 நாள்:21.02.2024" என எண்ணிட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 ன் பிரிவு 47ன் படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திரு. P. செல்வராஜ் மற்றும் திரு. K. பாலசுப்ரமணியன், எண்.120/21, கபிலன் கார்டன், கோதை நகர், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் என்பவருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019 ன் படி மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். ஏனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

1.1 மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ /கா பு ந வகு (கமா) எண். 867/2023 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின் படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றம் கட்டிட விதிகள் 2019 விதி 47(11) ன் படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை குடிநீர் வடிகால் வசதி, கழிவுநீர் வச மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதற்கு உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1.2 மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கென இடம் (ஊராட்சி மற்றம் TANGEDCO) ஒதுக்கப்பட்டிருப்பின் அவ்விடத்தினை ஊராட்சி மற்றம் TANGEDCO விற்கு தான ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்து அவைகளை நில அளவை செய்து உட்பிரிவு செய்வதற்காள செலவு / கட்டணத் தொகையினை மனுதாரரிடமிருந்து ஊராட்சி மற்றும் TANGEDCO நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1.3 உதவி இயக்குநர் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகள் அமைப்புகள், அளவுகள் மற்றும் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு உதவி இயக்குநர், கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

1.4இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுடன் அமைக்கப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டக சாலை மற்றம் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்காக (EWS) ஒதுக்கப்படும் மனைகளுக்கு 1 மீட்டருக்கும் மற்ற மனைகளுக்கு 9 மீட்டர் அகலத்திற்கும் குறைவான சாலைகளுக்கு 1.5 மீட்டரும், 9 மீட்டர் அகலத்திற்கு அதிகம் மற்றும் 18 மீட்டர் அகலத்திற்கும் குறைவான சாலைகளுக்கு 3 மீட்டரும், 18 மீட்டர் அகலத்திற்கு அதிகம் மற்றும் 30.5 மீட்டர் அகலமுள்ள /அகலத்திற்கும் குறைவான சாலைகளுக்கு 6 மீட்டர் என்ற அளவிலும் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றம் கட்டிட விதிகள் 2019 ன் படி மனையின் எல்லையிலிருந்து தெருவின் உயர்மட்டம் அமைய வேண்டும் மற்றும் அவ்விதிகளின் படியே உள்ள உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த வித கட்டிடமோ சுவரோ கட்டுதடல் கூடாது.
5. 9 மீட்டர் அகலத்திற்கும் அதிகமான உள்ள எல்லா மனைப்பிரிவு சாலைகளிலும் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும். மரங்கள் சாலைகளின் எல்லையிலிருந்து 1 மீட்டர் இடைவெளி விடப்பட்டு சாலைகளின் ஓரமாக இருபுறமும் 9 மீட்டர் இடைவெளிகளில் நடப்பட வேண்டும்.
6. தளப்பரப்பு குறியீடு எண்(FSI) TNCDBR 2019 ன் படி அனுமதிக்கலாம்.
7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
8. சமன்படுத்தவோ நிலச்சரிவை சீர் செய்யவோ தோண்டியெடுத்துப் பள்ளங்கள் மற்றும் குழிகள் ஏற்படுத்தக்கூடாது.
9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து கட்டிட அனுமதி பெற வேண்டும்.
10. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடை, கடைகளுக்கான மனையினை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
11. கோவில் / தேவாலயம் / மஸூதி ஆகியவற்றிக்காக ஒதுக்கப்பட்டிருந்தால் அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
12. பூங்கா, சிறுவர் விளையாடும் இடம் மற்றும் திறந்த வெளி இடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில உட்பிரிவு செய்து பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் ஊராட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

13. மனைப்பிரிவின் குறுக்கே குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின் கம்பிப் பாதை மற்றும் தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையில் ஓரமாக அல்லது அங்கீகரிக்கப்பட்டமனைப்பிரிவு வரைபடத்தில காண்பித்துள்ளவாறே மாற்றியமைக்க வேண்டும்.

14. மனைப்பிரிவின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுவாதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் , வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகள் விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

15. அரசாணை எண்.18 ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சித்துறை நாள்.04.02.2019 ன் படி நில உரிமை குறித்து உறுதி செய்து கொள்வது ஊராட்சி நிர்வாகத்தின் பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியினால் நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின் படி மற்றும் மனுதாரர் சமர்பித்த A மற்றும் C ன்படியும் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்படி இம்மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்புத்துறையால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் ஊராட்சியினரால் ஆய்வு செய்து முடிவு எடுக்கப்படும்.

15.1 தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 ன் படி அமலில் இருக்கும் இடத்தில் அமைந்தால் இம்மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உத்தவரம்பு சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

15.2 1984 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக ஊராட்சி மற்றும் மனுதாரர்கள் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின் அதற்கு மனுதாரர்களே பொறுப்பாவார்.

15.3 மேற்படி மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது நிர்வாக அதிகாரியின் அங்கீகார நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

15.3 மேலும், மேற்படி சட்டங்களின் படி நில அர்ஜீதம் தொடர்புடைய நில ஆர்ஜீதப்பட்டியல் (LAND PLAN SCHEDULE) ஏதும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிவை அடைந்த பின்னரே ஊராட்சியால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்த அங்கீகாரம் வழங்கப்படும்.

16. .மனுதாரரின் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டதற்கான மன்றத் தீர்மான எண், நாளும் மற்றும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பமான எண், நாளும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

17. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி ஊராட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

18. மனுதாரர் மேற்படி மனைப்பிரிவின் இறுதி ஒப்புதலுக்காக தலைவர், ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.மேலும், இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப

ஒப்புதல் வழங்கியதால் பொது மக்களுக்கோ அல்லத சுற்றுச்சார்பு சூழலுக்கோ பாதிப்பு ஏற்படின் வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

19. ஊராட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும், நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத்துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும்.
20. விற்பனைக்கான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் ஒரு நகலும், நகர் ஊரமைப்புத்துறையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவின் வரைபட நகலும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
21. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் அருகே 1.8 மீ X1.2 மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொது மக்களின் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும்.
22. மனைப்பிரிவில் அமையும் மனைகளின் குடியிருப்பு கட்டிட அபிவிருத்தி அடையும் போது கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர்ஆகியவை அருகில் உள்ள நிலங்களில் கலக்கா வண்ணம் ஊராட்சியால் உறுதி செய்யப்படும்.
23. அரசாணை எண்.134 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்20.09.2002 ன் படி நில உரிமை குறித்து ஊராட்சியினரால் வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையிலேயே தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றம் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏதேனும் அறிந்திடும் போது / தெரியவரின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் இரத்து செய்ய உடனடியாக பரிந்துரை செய்யப்படும்.

31/03/2024

தலைவர்,
ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி

பெறுதல்,

திரு. P. செல்வராஜ் மற்றும் K. பாலசுப்ரமணியன்,
கதவு எண்.120/21,
கபிலன் கார்டன், கோதை நகர்,
கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

நகல்,

1. உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, கரூர் மாவட்டம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், நில அளவைத்துறை, கரூர் மாவட்டம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மேலக்கரூர்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கரூர் ஊராட்சி ஒன்றியம்.
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்– கரூர் ஊராட்சி ஒன்றியம்.